DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

Calender

Miscellaneous — Case No CC 108/18

Priliminary Register

Sessions

| | | |
|---|---|---|
| | Prosecution | PW 2 |
| Deposition of witness for | Defence | |
| | Court | |

Name — Sheik Mohideen

Father's Name

Village

Taluk

Caste

Calling

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

01.04.2019 முதல் விசரணை:

நான் திருமங்கலம் சந்தைப் பேட்டையில் குடியிருந்துவருகிறேன். அ.சா1. ஐத் தெரியும். என் கம்பெனி அருகில் லேத் நடத்தி வருகிறார். 04.05.2018ம் தேதி சுமார் 4 மணியளவில் முத்துக்கருப்பன் என்னிடம் வந்து இரு சக்கர வாகனம் பல்சர் வாகனத்தை லேத் அருகில் உள்ள பிள்ளையார் கோவில் அருகில் நிறுத்தியிருந்ததாகவும் அது காணாமல் போனதாக சொன்னார். நாங்கள் தேடிப்பார்த்தோம். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் 4 வருடங்களாக சந்தைப் பேட்டையில் குடியிருந்து வருகிறேன். நாகராஜ் எனக்கு ஓனர் என்றால் சரிதான். விடுமுறை எடுக்காமல் தொடர்ந்து பணிக்கு செல்வேன் என்றால் சரியல்ல. என்முதலாளி வண்டியை கோவில் முன்பு நிறுத்தியதை நான்

பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் வாகனத்தை நிறுத்தும் போது நான் பார்த்தேன். வண்டி திருடு போன போது நான் பார்க்கவில்லை. தேடும் போது பார்த்தேன். போலிசாரிடம் வண்டி நிறுத்தியதை நான் பார்த்ததாக சொன்னேன். நான் காலை 9.30 மணிக்கு வேலைக்கு சென்று வேலை முடித்து 6.30 மணிக்கு திரும்புவேன். சில நேரங்களில் இரவு 9 மணி வரை ஆகும். இரு சக்கர வாகனம் காணாமல் போன போது மதியம் 3.30 மணியிருக்கும். நான் வேலை செய்யும்போது முத்துக்கருப்பன் வண்டி காணாமல் போனதாக கேள்விப்பட்டேன் என்றுசொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காணாமல் ேபன போது நான் வண்டியை பார்க்கவில்லை என்றும் வாகனத்தின் உரிமையாளர் என் ஓனர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முதல் விசாரணையிலும் குறுக்கு விசாரணையிலும் மாறி மாறி பொய்யாக சாடசியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வண்டி காணாமல் போனபோது வெளியில் இருந்து பார்த்ததாக சொல்லவில்லை. நானும் அ.சா1. ம் ஒரே தெருவைச் சேர்ந்தவர்கள் என்பதாலும் பக்கத்து பக்கத்து கடை என்பதாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.